# DEPOSITION OF WITNESS

*( XXIII Code of Criminal Procedure)*

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, SIVAGANGAI.**

**Prosecution:**PW.1

**Deposition of witness for }**

**Defence: -**

**Case No.** Sessions Case No.78/2015

| | | | |
|---|---|---|---|
| **Name** | வீராச்சாமி | **S/o.** | முனியாண்டி |
| **Village** | வேலூார் | **Taluk** | மானாமதுரை |
| **Religion** | இந்து | **Calling** | அ.சா.1 |
| **Date** | 08.11.2021 | **Age** | 35 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X 1872 of the day 08.11.2021.**

**முதல் விசாரணை:**

நான் தற்சமயம் வேலூாரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். இறந்து போனவர்களான திருமதி.இராஜேஸ்வரி, திருமதி.தனபாக்கியம் மற்றும் திருமதி.ஆறுமுகம் ஆகியோர்களைத் தெரியும். இந்த சம்பவம் சம்மந்தமாக என்னை காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரித்துள்ளார். சம்பவம் சம்மந்தமாக மானாமதுரை சிப்காட் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு தான் நான் கொடுத்தது. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது. அந்த புகார் மனு அ.சா.ஆ.1 மற்றும் அதிலுள்ள என்னுடைய கையெழுத்து அ.சா.ஆ.2-ஆகு குறியீடு செய்யப்படுகிறது. 06.01.2015-ம் தேதியன்று எதிரி பாண்டித்துரையும் அவரது மனைவியும் மாலை 06.00 மணிக்கு மேல் பாண்டித்துரையின் மனைவி வீட்டில் வைத்து சண்டை போட்டார்கள். எனது வீடு பாண்டித்துரையின் மனைவி வீட்டிலிருந்து 200லிருந்து 250 மீட்டர்

தூரத்திற்குள் இருக்கும். நான் எனது வயலுக்குச் செல்லும் வழியில் பாண்டித்துரை மனைவி வீடு இருந்ததால் நான் அங்கு சென்றேன். அப்போது பாண்டித்துரை அவர் மனைவியுடன் சண்டை போட்டுக்கொண்டிருந்தார். நான் பாண்டித்துரையிடம் ஏன் சண்டை போடுகிறீர்கள் என கேட்டேன். அதற்கு பாண்டித்துரை நீ போபா என்று சொல்லிவிட்டார். உடனே நான் எதிரி பாண்டித்துரையின் மாமனாருக்கு போன் செய்து எதிரி பாண்டித்துரை உங்கள் மகளிடம் சண்டை போடுவதாகவும், நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள் எனவும் கூறிவிட்டுச் சென்றுவிட்டேன். வாய்ச்சண்டை மட்டும் நடந்ததை நான் பார்த்தேன். (அரசு தரப்பு வழக்கறிஞரின் சாட்சி புலன்விசாரணைக்கு முன்பு அளித்த வாக்குமூலத்திற்கு பகுதி மாறாக தற்போது சாட்சியமளிப்பதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது.)

**<u>அரசு தரப்பு கு.வி:</u>**

நான் 06.01.2015-ம் தேதியன்று இரவு 08.00 மணியப்போல் எதிரி பாண்டித்துரையின் மனைவி இராஜேஸ்வரியின் குழந்தையை பார்ப்பதற்காக என் அக்கா தனபாக்கியத்தின் வீடான வேலூர் ஒத்த வீட்டிற்கு கோவிந்தன் மனைவி குஞ்சரத்துடன் சென்றதாக நான் காவல் ஆய்வாளர் விசாரிக்கும் போது கூறினேன் என்றால் ஆமாம். அப்போது வேலூர் ஒத்த வீடு உடையணசாமி என்பவரின் வீட்டின் அருகில் உடையணசாமி மனைவி முத்துராக்கு, உடையணசாமி மகன் மாயழகு ஆகியோர்கள் நின்று கொண்டிருப்பதாக என்னை காவல் ஆய்வாளர் விசாரிக்கும் போது கூறினேன் என்றால் ஆமாம். அப்போது உடையணசாமி மனைவி முத்துராக்கு என்னிடம் இந்த நேரத்தில் எங்கே வருகிறீர்கள் என கேட்டதாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது நான் கூறினேன்

என்றால் ஆமாம். அதற்கு நான் தனபாக்கியம் மகள் இராஜேஸ்வரியின் குழந்தையைப் பார்க்க வருகிறோம் என்று சொன்னதாகவும், அதற்கு நாங்களும் வருகிறோம் என அவர்கள் கூறியதாகவும், உடனே நாங்கள் 4 பேரும் தனபாக்கியம் வீட்டிற்கு போனதாகவும் காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது நான் கூறினேன் என்றால் ஆமாம். அப்போது நாங்கள் சென்றபோது இராஜேஸ்வரி வீட்டு வாசலில் தனது கைக்குழந்தையுடன் நின்று கொண்டிருந்ததாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது நான் கூறினேன் என்றால் ஆமாம். அப்போது எதிரி பாண்டித்துரை TN 63 K 9093 என்ற எண்ணுள்ள மோட்டார் சைக்கிளில் வந்து வாசலில் நின்று கொண்டிருந்த இராஜேஸ்வரியிடம் குழந்தையைக் கேட்டு தகராறு செய்ததாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது நான் கூறினேன் என்றால் ஆமாம். அதற்கு இராஜேஸ்வரி குழந்தையை தர மறுத்ததினால் எதிரி பாண்டித்துரை தான் முதுகில் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்து ஏன்டி தேவுடியா முண்டை என் குழந்தையை கொடுக்க மாட்டியா என்று உரத்த குரலில் சத்தம் போட்டு இத்தோடு செத்துத் தொலை என்று சொல்லி இராஜேஸ்வரியின் வலது அக்கில் இடது கழுத்துக்குள் கீழ், கழுத்துக்கு மேல் ஓங்கி வெட்டி இரத்தக்காயத்தினை ஏற்படுத்தியதாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது நான் கூறினேன் என்றால் சரியல்ல. அப்போது தனபாக்கியம் அய்யய்யோ ஏன்டா என் மகளை வெட்டுகிறாய் என்று சத்தம் போட்டு தடுக்க வந்தவரை எதிரி பாண்டித்துரை ஏன்டி தேவுடியா முண்ட என்னையா தடுக்கிறாய் என்று சொல்லிக்கொண்டு நீயும் செத்துத் தொலை என்று சொல்லி தனபாக்கியத்தின் இடது கை சுண்டுவிரல் அருகில் வெட்டியதாகவும், மீண்டும் வெட்டும் போது அதை தனபாக்கியம் இடது கையால் தடுக்க மீண்டும் இடது மணிக்கட்டுக்கு மேல்

வெட்டியதாகவும் இதனால் தனபாக்கியத்தின் இடது கை துண்டாக தனியாக விழுந்ததாகவும், பிறகு மாறி மாறி தனபாக்கியத்தில் வலது புஜம் வலது கை தோள்பட்டைக்கு கீழ் வலது கணுக்கால், இடது கண், இடது தோள்பட்டை இடது காதுக்கு கீழ், கழுத்துக்கு மேல் இடது முழங்கை, வலது கை புஜம், இடுப்பு, நடுக்கழுத்து ஆகிய இடங்களில் மாறி மாறி வெட்டி பலத்த இரத்தக்காயத்தினை ஏற்படுத்தியதாகவும் காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது நான் கூறினேன் என்றால் சரியல்ல. அப்போது நாங்கள் 4 பேரும் அய்யோ, அம்மா என சத்தம் போட்டதாகவும், அந்த சமயம் இருளப்பன் அம்மா ஆறுமுகம் இதைப் பார்த்து பயந்து வீட்டிற்குள் வெளியே ஓடி வந்ததாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது நான் கூறினேன் என்றால் சரியல்ல. அப்போது எதிரி பாண்டித்துரை நீ வெளியில் ஓடுற தேவுடியா முண்ட என்று சொல்லிக் கொண்டு ஆறுமுகத்தின் இடது பக்க காதுக்கு கீழ், கழுத்துக்கு மேலும், இடது பக்க முதுகிலும் அருவாளால் ஓங்கி கொத்தினார் என்றும் இதனால் 3 பேரும் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து செத்துப் போனார்கள் என்றும் காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது நான் கூறினேன் என்றால் சரியல்ல. அப்போது எதிரி பாண்டித்துரையை நாங்கள் 4 பேரும் பிடிக்க முற்படும் போது என்னை யாராவது தொட்டால் உங்களுக்கும் இதே கதி தான் என மிரட்டிவிட்டு, குழந்தையுடன் கிழக்குப் பக்கமாக ஓடிவிட்டார் என காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது நான் கூறினேன் என்றால் குழந்தையுடன் ஓடியதாக கூறினேன். எதிரி பாண்டித்துரை ஓடியதற்கு பிறகு நாங்கள் சம்பவத்தை நேரில் பார்த்த அதிர்ச்சியில் அங்கிருந்து கிளம்பி எங்கள் உறவினர்களுக்கு தகவல் கொடுத்துவிட்டு இறந்து போன இராஜேஸ்வரியின் தந்தையும், இறந்து போன தனபாக்கியத்தின் கணவரும், இறந்து போன ஆறுமுகத்தின் மகனான

கோயம்புத்தூரில் இருந்த இருளப்பனுக்கு தகவல் கொடுத்துவிட்டு கிளம்பிவிட்டதாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது நான் கூறினேன் என்றால் சரிதான். பின்பு அங்கிருந்து சிப்காட் காவல் நிலையத்திற்கு இரவு 11.00 மணிக்குச் சென்று நான் புகார் கொடுத்தேன் என்றால் ஆமாம். அதன் பேரில் காவல் துறையினர் வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றும், இது தொடர்பாக காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள் நான் விவரங்கள் சொன்னேன் என்றால் சரிதான். எதிரி பாண்டித்துரை எனது உறவினர். எதிரியை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் ஏற்கனவே நடந்த உண்மைகளை காவல் துறையினரிடம் சொல்லிவிட்டு பிறழ்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் எதிரி பாண்டித்துரை ஓட்டி வந்த இரு சக்கர வாகனமான TN 63 K 9093 வாகனத்தை என்னால் அடையாளம் காட்ட முடியும். அந்த TN 63 K 9093 வாகனம் அ.சா.பொ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பு கு.வி:</u>**

நான் 6-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தமிழில் நன்றாக எழுதுவேன். அ.சா.ஆ.1 புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் தான் என்னுடையது என்றால் சரிதான். ஆனால் புகாரும் நான் சொல்லித்தான் எழுதப்பட்டது. யார் அந்தப் புகாரை எழுதினார் என்றால் என்னுடன் வந்த என் அண்ணன் சிவனாண்டி எழுதினார். நான் அவரிடம் சொல்லச் சொல்ல அவர் எழுதினார். தற்போது சிவனாண்டி உயிருடன் இல்லை. எப்போது இறந்தார் என்றால் அவர் இறந்து சுமார் 4 வருடங்கள் இருக்கும். சிவனாண்டி மேற்படி புகாரில் சாட்சி கையெழுத்து போட்டாரா என்றால் போடவில்லை. சிவனாண்டி எங்கே சந்தித்தேன் என்றால் எங்கள் ஊரான வேலூரில் அவரின் வீட்டில் போய் கூட்டிச் சென்றேன். மேற்படி

புகாரை நாங்கள் இருவரும் சிவனாண்டியின் வீட்டில் வைத்தே எழுதினோம். என் செல்போன் மூலம் இறந்த இராஜேஸ்வரியின் தந்தைக்கு தகவல் சொன்னேன் என்றால் சரிதான். நானும், சிவனாண்டியும் காவல் நிலையத்திற்குச் சென்று நடந்த விவரத்தினைச் சொன்னோம். அவர்கள் புகார் எழுதிக் கொடுங்கள் என்று சொன்னவுடன், போலீஸ் ஸ்டேஷனில் இருந்து எங்கள் ஊரான வேலூருக்கு வந்து சிவனாண்டி வீட்டிற்கு வந்து புகார் எழுதி மீண்டும் காவல் நிலையம் வந்து அ.சா.ஆ.1 புகாரைக் கொடுத்தோம். காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் பன்னீர்செல்வத்திடம் சம்பவத்தினைப் பற்றி 15 நிமிடங்கள் பேசினோம். என்ன பேசினோம் என்றால் சண்டை நடந்த விவரத்தினை மடட்டும் சொன்னோம். அவர் புகார் எழுதி வாருங்கள் என்று சொன்னார். நான் சொன்ன விவரத்தினை சார்பு ஆய்வாளர் அவர் வைத்திருந்த பதிவேட்டில் பதிவு செய்து கொண்டார். அதில் நான் காவல் நிலையம் வந்து சென்றதற்காக என்னிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டார். நான் காவல் நிலையம் சென்று சார்பு ஆய்வாளரை சந்தித்து பேசிவிட்டு அவர் அந்த விவரத்தைப் பதிவு செய்து என்னிடம் கையெழுத்து வாங்கியதற்கு பிறகு நான் காவல் நிலையத்திலிருந்து நான் 07.45 மணியிலிருந்து 08.30 மணிக்குள் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். காவல் நிலையத்திலிருந்து நேரடியாக சிவனாண்டி வீட்டிற்குச் சென்றுவிட்டு பின்பு எங்கள் ஊரில் உள்ள களஞ்சியம் என்ற பொது இடத்தில் வைத்து நானும், சிவனாண்டியும் புகாரை எழுதினோம். நான் விவரம் சொல்லச் சொல்ல சிவனாண்டி புகாரை எழுதினார். காவல் நிலையத்தில் நான் மட்டும் தான் புகாரை கொடுத்தேன். அப்போது என்னுடன் யாரும் வரவில்லை. நானும், சிவனாண்டியும் வேலுரைச் சேர்ந்தவர்கள். வேலூருக்கும், ஒத்தவீட்டிற்கும் இடையே சுமார் ½ கி.மீ தூரம் மட்டுமே இருக்கும்.

மேற்படி இரு கிராமங்களுக்கும் இடையே 1 ½ கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரியல்ல. அடுத்தடுத்த தெருதான். ஒத்தவீடு கிராமத்தில் சுமார் 15 வீடுகள் இருக்கும். வேலூர் மற்றும் ஒத்த வீட்டில் எனக்கு வீடு உள்ளது. ஒத்த வீட்டிலிருந்து வேலூர் மேற்குத் திசையில் இருக்கிறது. எனக்கு வயல் வேலூரில் உள்ளது. வேலூர் கிராமத்திற்கு மேற்கே எனது வயல் என்றால் சரியாக சொல்ல முடியவில்லை. ஆனால் வடக்குத் திசையிலோ அல்லது மேற்குத் திசையிலோ தான் இருக்கிறது. நான் என் வயலுக்கு செல்ல இராஜேஸ்வரியின் வீட்டின் வழியாகச் செல்ல வேண்டிய அவசியமில்லை என்றால் அந்த வழியாகத் தான் எனக்குப் பாதை. நான் என் வயலுக்கு செல்ல இராஜேஸ்வரியின் வீட்டின் வழியாகச் செல்ல வேண்டிய அவசியமில்லை என்றும், நான் இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு பூர்வீக வழியே அது தான். இராஜேஸ்வரியின் வீட்டிற்கு எந்தத் திசையில் என் வீடு உள்ளது என்றால் எனக்கு திசை சரியாகச் சொல்லத் தெரியவில்லை. ஒத்தவீட்டில் இருக்கும் எனது வீட்டிற்கு ரேசன்கார்டு உள்ளதா என்றால் இருக்கிறது. ஒத்தவீட்டில் இருப்பதற்கு எனக்கு எந்த ஆவணமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வீட்டு வரி ரசீது உள்ளது. வீட்டு வரி இருப்பதாக நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. புகாரில் கூட நான் வேலூர் என்ற முகவரியைத் தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த புகாரில் எனக்கு சொந்த ஊர் வேலூர் என்று தான் குறிப்பிட்டுள்ளேன். ஒத்த வீடு கிராமம் என்பது எங்கள் ஊரைத் தவிர யாருக்கும் தெரியாது. ஒத்த வீடு கிராமத்திற்கும், சிப்காட் காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 12 கி.மீ தூரம் இருக்கும். நான் முதன்முறையாக காவல் நிலையம் சென்று தகவல் தெரிவித்து பிறகு சிவனாண்டியை சந்திக்கச் சென்ற போது அந்த நேரத்தில் எனக்குத் தெரிய காவல்

நிலையத்தில் இருந்து அதிகாரிகள் யாரும் ஒத்த வீடு கிராமத்திற்குச் செல்லவில்லை என்றால் சரிதான். ஒத்த வீடு கிராமத்தில் தெரு போன்ற அமைப்போ, சாலை போன்ற அமைப்போ கிடையாது என்றும், அங்கொன்றும் இங்கொன்றுமாக வீடுகள் இருக்கும் என்றால் சரிதான். ஒத்த வீடு கிராமத்திலிருந்து வேலூார் கிராமத்தில் உள்ள என் வீடு தென்மேற்கு திசையில் உள்ளது என்றால் சரிதான். வேலூார் கிராமத்தில் இருந்து கிழக்கு நோக்கி சிப்காட் ரோடு செல்கிறது என்றால் சரிதான். வேலூார் கிராமத்தில் இருந்து வந்து இடது புறமாக திரும்பி நேராக சென்றால் கள்ளர்குளம் என்றால் சரிதான். கள்ளர்குளத்திற்கு முன்பு வேலாங்குளம் என்றால் வேலாங்குளம் வயல்கள் தான். வீடுகள் இல்லை. வேலூார் கிராமத்தில் இருந்து இடது பக்கமாக ஒத்த வீடு கிராமம் உள்ளது என்றால் சரிதான். வேலாங்குளம் போகும் ரோடு, ஒத்த வீடு கிராமத்திற்கு கிழக்குப் பக்கம் தென்வடலாக செல்கிற விவரம் எனக்குத் தெரியும் என்றும், வழக்கிற்காக எனக்கு திசைகள் தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. இராஜேஸ்வரியின் வீட்டிலிருந்து பாண்டித்துரையின் வீடு சரியாக சொன்னால் சுமார் 250 அடி இருக்கும். அது வடக்குத் திசையாக இருக்குமா என்றால் எனக்கு திசை பற்றி தெரியாது. அந்த வீடு வடக்குத் திசையில் தான் உள்ளது என்றும் நான் இந்நீதிமன்றத்தில் தவறுதாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. வேலூார் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமத்தில் நிறைய குற்ற சம்பவங்கள் நடக்கும் என்றும், சிவகங்கை மாவட்டத்தில் அந்த பகுதி கருப்புப் புள்ளி உள்ள பகுதி என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. வேலூார் மற்றும் சுற்றுப்புற கிராமத்தில் நிறைய கொலை சம்பவங்கள் ஏற்பட்டு அது சம்மந்தமாக சிப்காட் காவல் நிலையத்தில் வழக்குகள் வருடத்திற்கு நிறைய பதிவு செய்யப்படுகிற விவரம்

தெரியுமா என்றால் எனக்குத் தெரியும். வேலூார் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமப்பகுதிகளுக்கு நிரந்தரமான தொழில் எதுவும் கிடையாது என்றால் விவசாயம் மட்டுமே பிரதான தொழில். அந்த பகுதியில் வயல் வெளிகள் வானம் பார்த்த பூமி என்றால் சரியல்ல. கண்மாய் பாசனம் உள்ளது. சிறுகுடி கண்மாயிலிருந்து வேலூார் கண்மாய்க்கு தண்ணீர் வரும் வசதி உள்ளது. வேலூார் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதி தண்ணீர் பஞ்சம் மிகுந்த பகுதி என்றும், அதனால் விவசாயம் சரிவர நடைபெறுவதில்லை என்றும் சொன்னால் சரிதான். அதனால் எங்கள் ஊரில் நிரந்தரமாக யாரும் குடியிருக்கவில்லை என்றால் குடியிருக்கிறார்கள். ஆனால் ஆண்கள் அனைவரும் வெளியூர் வேலைக்குச் சென்றுவிடுவார்கள். எங்கள் ஊரில் வேலிக்கருவேல மரங்களை டென்டர் எடுப்பதில்லை. ஆனால் அவற்றை வெட்டுவது எங்களது தொழில். அதேபோல் எங்கள் ஊரில் உள்ளவர்கள் பணத்திற்காக பல குற்றச் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. காவல் துறையினரிடம் நான் புகார் கொடுத்த போதும் என்னை விசாரித்தார்கள். அதன் பிறகு 2 நாட்கள் கழித்தும் விசாரித்தார்கள். நான் சொல்வதைக் எழுதிக் கொண்டார்களா என்றால் எழுதிக்கொண்டார்கள். எனக்கு இறந்த இராஜேஸ்வரி உறவுக்கார பெண் என்றால் என் அக்கா மகள். எனக்கு மருமகள். எங்கள் ஊரில் அக்கா மகளை திருமணம் செய்யும் பழக்கும் உண்டா என்றால், ஒரு சில நபர்கள் செய்து கொள்வார்கள். எனக்கு தற்போது 35 வயதாகிறது. இன்னும் திருமணம் ஆகவில்லை. திருமணம் செய்து கொள்ளாததற்கு குறிப்பிட்ட காரணம் உள்ளதா என்றால் என் பெற்றோர்களுக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நான் திருமணம் செய்துகொள்ளவில்லை. எனக்கும், இறந்த இராஜேஸ்வரிக்கும் சின்ன வயதிலிருந்தே திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று பெரியவர்கள்

பேசிக்கொண்டார்களா என்றால் இல்லை. அவ்வாறு பேச்சுவார்த்தை இருந்தது என்றும், வழக்கிற்காக மாற்றிச் சொல்லுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. கருவேல் மரங்கள் வெட்டுவது சம்மந்தமாக எனக்கும், எதிரிக்கும் விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. இராஜேஸ்வரியை, எதிரி பாண்டித்துரைக்கு திருமணம் செய்து வைத்ததினால் எனக்கு எதிரி மீது கடுமையான விரோதம் இருந்து வந்தது என்றால் சரியல்ல. அதனால் எனக்கும், எதிரி பாண்டித்துரைக்கு சண்டை வரும் என்றும், அந்த விவரம் ஊரில் உள்ள அனைவருக்கும் தெரியும் என்றால் சரியல்ல. எனக்குத் தெரிய இந்த சம்பவம் நடை பெற்றதாக சொல்லும் சமயத்தில் ஆண் நபர்கள் யாரும் இல்லை என்றால் சரிதான். இராஜேஸ்வரியின் அப்பாவும், சகோதரரும் பிழைப்பிற்காக கோயம்புத்தூர் சென்று விட்டார்கள் என்றால் இராஜேஸ்வரியின் அப்பா அவரின் மகளை பார்ப்பதற்காக கோயம்புத்தூர் சென்றார். அவர் எங்கள் ஊரில் தான் விவசாயம் செய்து வருகிறார். நான் கொடுத்த புகாரில் இறந்த இராஜேஸ்வரியின் தகப்பனார் இருளப்பனிடம், எதிரி பாண்டித்துரை, மேற்படி இருளப்பன் மகளிடம் சண்டை போட்டதையும், போன் மூலம் அவருக்கு தகவல் சொன்ன விவரத்தையும் குறிப்பிட்டு தான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகாரில் மேற்படி இருளப்பனுக்கு நான் போன் மூலம் தகவல் சொன்ன விவரம் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் ஏற்கனவே முதல் விசாரணையில் சொல்லிய விவரத்தினைத் தான் சிவனாண்டியிடம் சொல்லி அவரை புகார் எழுதச் சொன்னேன் என்றால் சரிதான். அதனால் அ.சா.ஆ.1 புகாரில் நான் சொல்லாத விவரங்களும் அடங்கியுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி 6-ம் தேதியன்று பாண்டித்துரை, இறந்த இராஜேஸ்வரியின் வீட்டிற்கு வரவில்லை என்றும், அவருடன் குழந்தையை கேட்டு சண்டை போடவில்லை என்றும் சொன்னால்

சரியல்ல. குழந்தையை துாக்கிக்கொண்டு ஓடவில்லை என்றும், அவ்வாறு நான் பார்க்காத சம்பவத்தினை அவர் மீது உள்ள முன்விரோதம் காரணமாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எதிரி பாண்டித்துரை எந்த வண்டியிலும் வந்து சண்டையில் ஈடுபடவில்லை என்றும், அவரின் வாகனம் அவரின் வீட்டில் தான் இருந்தது என்றும், அந்த விவரத்தினை வழக்கிற்காக மாற்றிச் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் இறந்த 3 பேர்களும் அடையாளம் தெரியாத வேறு நபர்களால் தாக்கப்பட்டு இறந்துவிட்டார்கள் என்றும், நான் எதிரி பாண்டித்துரை தான் பிரச்சனை செய்தார் என்று சொல்லி பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எதிரி பாண்டித்துரையின் மகன் தென்பாண்டியை எதிரிதான் வளர்த்து வருகிறார் என்றால் சரியல்ல. அவரின் தாயார் தான் வளர்த்து வருகிறார். எதிரி பாண்டித்துரை அடிக்கடி வெளியூர் வேலைக்குச் செல்வதால் அவரின் அம்மாவிடம் தன் மகனை விட்டுள்ளார் என்றும், மற்றபடி எதிரி தான் அவரின் மகனை வளர்த்து வருகிறார் என்றால் சரியல்ல. நான், எங்கள் ஊரைச் சேர்ந்த அழகு மனைவி குஞ்சரம், உடையணசாமி மனைவி முத்துராக்கு, உடையணசாமி மகன் மாயழகு ஆகிய அனைவரும் சண்டையை நாங்கள் பார்த்தோம் என்று இவ்வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறோம் என்றால் சரியல்ல. நான் பாண்டித்துரையின் மீது கொண்ட முன் விரோதத்தினால் பார்க்காத சம்பவத்தினை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்ற விவரம் எனக்கு நன்றாகத் தெரியும் என்றும், எதிரி மீது கொண்ட விரோதத்தினால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பாண்டித்துரையிடம் ஏன் சண்டை இடுகிறாய் என்ற விவரமும், அதற்கு அவர் உன் வேலையை பார்த்துட்டு போடா என்று சொன்ன

விவரமும் இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு ஒத்தவீடு மற்றும் கள்ளர்குளம் கிராமங்களில் வீடுகள் உள்ளது. அதிகரை கிராமத்தில் விவசாய நிலங்கள் உள்ளது. எதிரி பாண்டித்துரை, இராஜேஸ்வரியை திருமணம் செய்த வகையில் எனக்கு உறவினர் என்றால் எனக்கு இரண்டு பேருமே உறவினர்கள் தான்.

**மறுவிசாரணை:** இல்லை.